தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 221/மா/2022
நாள்: 19.01.2023

திரு. இரா. மயில்சாமி, புதுவிளாங்குடி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர், மண்டலம்–03
மதுரை மாநகராட்சி, மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.05ல் வசிக்கும் திரு.இரா.மயில்சாமி என்பவரின் 09.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.11..2022–ல் பெறப்பட்டு 221/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.05ல் வசிக்கும் திரு.இரா.மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 09.11..2022 நாளிட்ட தனது மனுவில் :

" மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5ல் வசிக்கும் R. மயில்சாமி ஆகிய நான் சமூக ஆர்வலரும், மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் கீழ் ஆர்வலராவேன். அரசுக்கு சொந்தமான இடம் ஆக்கிரமிப்புகளை தமிழக அரசாணை எண். (Ms) 540 Revenue(LD 6(2)) Department நாள். 04.12.2014ன்படி புகார் செய்து பல இடங்களை அகற்றியுள்ளேன். இந்நிலையில் மதுரை மாநகராட்சி வார்டு எண்.75 மண்டலம் 03(மத்தியம்) கதவு எண்.70 திருப்பரங்குன்றம் ரோடு (ரத்தினாபுரம் AA ரோடு ) மதுரை–11 இடமானது ஸ்ரீபெருமாள் கோவிலுக்கு சொந்தமானதாக தெரியவந்ததின்பேரில் அதற்கான ஆவணங்களை திரட்ட முயற்சி மேற்கொண்டு வருவாய்துறை, மதுரை மாநகராட்சி மற்றும் நிலஅளவை பிரிவு துறைகளில் ஆவணங்களை கேட்டுவந்த நிலையில் தர

மறுத்துவிட்டதினால் அதன்பின்பு RTI Act 2005 பிரிவு **6(1) / 2(J)** ன்கீழ் கள ஆய்வு செய்ய அனுமதி கேட்டு **28.12.2021** தேதியில் மாவட்ட ஆட்சியர் மதுரை அவர்களுக்கு மனு செய்தேன். பின்பு சட்டப்பிரிவு **19(1)**ல் **21.02.2022** தேதியில் முதல் மேல் முறையீட்டு மனு மாநகராட்சி ஆணையருக்கு மனு செய்தும், பலன் இல்லை. பின்பு மாண்புமிகு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் இரண்டாம் மேல் முறையீட்டு சட்டப்பிரிவு **19(3)**ல் **7.5.2022** தேதியில் மனு தாக்கல் செய்தும், சட்டப்பிரிவு **18(1)**ல் **3.2.2022** ஆணையத்திற்கு புகார் செய்ததின் பேரில் மாண்புமிகு தகவல் ஆணையம் எனது மனுவை எடுத்துக்கொண்டு வழக்கு எண். SA 8I68/A/2022 எண்ணாக பதிவு செய்து **28.06.2022**ல் கள ஆய்வுக்கு உத்தரவு பிறப்பித்தும், பல போராட்டங்களுக்கு பின் ஆய்வுக்கு அனுமதிக்கப்பட்டேன். நான் மதுரை மாநகராட்சி மண்டலம் **3** (மத்தியம்) அலுவலகம் நேரடியாக சென்று ஆவணங்களை ஆய்வு செய்து எண்.**70** திருப்பரங்குன்றம் ரோடு, மதுரை **11** கதவு இலக்கம் கொண்ட இடம் அருள்மிகு வெங்கடேஸ்வரா டெம்பிள் நந்தவனம் என்று **1940** ஆண்டைய ஆவணத்தால் பழைய சர்வே எண்.**2001** பட்டா எண்.**478** என்று உள்ளதை உறுதி செய்து, டவுன் சர்வே ரிஜிஸ்டர் ஆவணத்தை சான்றிட்ட நகலாக பெற்றுக்கொண்டேன். இதன் பரப்பளவு இடம் ஏக்கர் **1.34848** சதுரஅடி ஆகும். இதன் தற்போதைய சந்தைமதிப்பு ரூ.**80** கோடி முதல் **100** கோடி வரையுள்ள சொத்தாகும். மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அருள்மிகு வெங்கடேஸ்வரா திருக்கோவில் நந்தவனம் இடத்தை ஆக்கிரமிப்பு (remove) அகற்றித்தர வேண்டும் என்று **03.11.2022** அன்று தேதியில் பதிவு தபாலில் (RT 55037661IN) மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் செயற்பொறியாளர்(திட்டம்) மதுரை–**2** அவர்களுக்கு புகார் மனு அனுப்பியுள்ளேன். மேலும் தமிழக அரசாணை (நிலை) எண்.**186** வருவாய் (நி.,மு.**1(2)** துறை நாள் **29.04.2003**ன் படி கோவில் நிலங்களை மீட்டு எடுக்க நகராட்சி மற்றும் மாநகராட்சி அதிகாரிகளுக்கு அதிகாரம் உள்ளது. ஆனால் இன்னும் சிறு நடவடிக்கை கூட மேற்கொள்ளவில்லை. மேலும் இந்த அரசாணையில் உள்ளபடி வரிசை எண்.**5** பத்தி எண்.**6**ல் உள்ளபடி ஆக்கிரமிப்புகளை அகற்ற தவறிய அதிகாரிகள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், மேற்படி அருள்மிகு வெங்கடேஸ்வரா டெம்பிள் நந்தவனம் சொந்தமான பழைய புல எண் **2001** பட்டா எண் **478** பரப்பளவு, **1** ஏக்கர் **34,848** சதுர அடி மாடக்குளம், வருவாய் கிராமத்திற்குட்பட்ட கதவு எண்.**70** திருப்பரங்குன்றம் மெயின் ரோடு (ரத்தினாபுரம் AA) மதுரை–**11**ல் உள்ள இடத்தை போலியான ஆவணங்கள் மூலம் திரு.இராஜேந்திரன், திரு.காந்தி மற்றும் திரு.மணிமாறன் ஆகியோர் மேற்படி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். மேற்படி சொத்தானது பலகோடி ரூபாய் சொத்தாகும். அருள்மிகு வெங்கடேஸ்வரா டெம்பிள் நந்தவனத்திற்கு சொந்தமான இடத்தை அகற்றி(remove) தர மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிட்டும், ஆக்கிரமிப்புகளை அகற்றியது பற்றி அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டும், தவறு செய்தவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொண்டும், அருள்மிகு வெங்கடேஸ்வரா டெம்பிள் நந்தவனம் திருக்கோவிலுக்கு சொந்தமான இடம் என்று நிரந்தரபெயர் பலகை வைத்தும், பின்வரும் காலங்களில் இதுபோன்று ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு பாதுகாக்க உத்தரவிடுமாறும் விரைவான நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

**2.** இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை **05.01.2023** அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி **21.12.2022** நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3. மனுதாரர் 05.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

" மதுரை மாநகராட்சி, வார்டு எண்.75, மண்டலம் –3(மத்தியம்) எண்.70, திருப்பரங்குன்றம் ரோடு, மதுரை–11, பழைய பட்டா எண்.478, பழைய சர்வே எண்.2001 புதிய T.;S.எண்.2001/1, 2002/3, 2002/2005 மாடக்குளம் வருவாய் கிராமம், இணை சார்பதிவாளர் எண்.4, பழங்காநத்தம் அருள்மிகு வெங்கடேஸ்வரா திருக்கோவில் நந்தவனத்திற்கு (Flower Garden) சொந்தமான 1.82 ஏக்கர் இடத்தை அங்குள்ள பஸ் கம்பெனி ஆக்கிரமிப்பு செய்து பஸ்நிறுவனம் நடத்தி வருகின்றனர். அரசாணை எண் (நிலை) எண்.186 வருவாய்த்துறை நாள்.29.04.2003ல், கோவில் இட ஆக்கிரமிப்பை இந்து அறநிலையத்துறை மட்டுமல்லாமல், பொதுப்பணி, வருவாய்த்துறை மற்றும் மாநகராட்சி ஆகிய துறைகள் ஆக்கிரமிப்புகளை அகற்றிட வழிவகை செய்துள்ளது. எனவே, சட்டத்திற்கு புறம்பாக தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள மேற்கண்ட கோவில் இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பை மாநகராட்சி அலுவலர்களால் அகற்றிடவும், அதனை முறையாக பராமரித்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது 03.11.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தைக்கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர், உதவி ஆணையர்(பொறுப்பு) மற்றும் உதவி செயற்பொறியாளர்(திட்டம் ) ஆகியோர் 05.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் குறித்து வருவாய் நகரளவை ஆவணங்களை ஆய்வு செய்ததில் நகரப்புல எண் 2001 என்பது 1933ம் ஆண்டு நடைமுறையில் இருந்த வருவாய் நகரளவை ஆவணங்களின்படி சர்வே வார்டு IV, 25 நகரப்புல எண் 2001ன் பரப்பளவு 1 ஏக்கர் 34,848 சதுர அடி, பட்டா எண்.478ன்படி வெங்கடேஸ்வரா கோவில் நந்தவனம் என தாக்கலாகியுள்ளது என தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் எனது 02.01.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி தெரிவித்து இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

5. மதுரை மாநகராட்சி உதவி ஆணையர்(பொ) தனது 02.01.2023 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

" மதுரை மாநகராட்சி மண்டலம் 03க்குட்பட்ட சம்பந்தப்பட்டுள்ள புலத்தின் வருவாய் நகரளவை ஆவணங்களை ஆய்வு செய்ததில் மனுதாரர் குறிப்பிடும் நகரப்புல எண்.2001 என்பது 1933ஆம் ஆண்டு தயார் செய்து நடைமுறையில் இருந்த வருவாய் நகரளவை ஆவணங்களின்படி சர்வே வார்டு IV பிளாக் 25, நகரப்புல எண்.2001ன் பரப்பளவு 1 ஏக்கர் 34848 சதுர அடி பட்டா எண்.478ன்படி வெங்கடேஸ்வரா கோவில் நந்தவனம் என தாக்கலாகியுள்ளது. அதன்பின்பு மதுரை வருவாய் கோட்டாட்சியர் கொடை ஆணை எண்.25/56 நாள் 01.10.56 மற்றும் TK 8A/74/66 நாள் 10.12.56ன்படி நகரப்புல எண்.200/1 பரப்பு 4096 சதுர அடி மதுரை முனிசிபல் கவுன்சில் ரோடு எனவும், 200/2 பரப்பு 1 ஏக்கர் 30752 சதுரஅடி லங்கராம் என்பவர் பெயரிலும்

உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய நகரளவை வருவாய் ஆவணங்களின்படி சர்வே வார்டு IV பிளாக் 37 பரப்பளவு 6850 சதுர மீட்டர் லங்கராம் மற்றும் 8 நபர்கள் பெயர்களில் தாக்கலாகியுள்ளது. மேற்படி மனுதாரர் குறிப்பிடும் இடம் உட்பிரிவு செய்யப்பட்டு பட்டாதாரர் பெயரிலேயே உள்ளது. மதுரை மாநகராட்சி பெயரில் தாக்கலாகவில்லை என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

6) மனுதாரரது புகார் மனு, வாக்குமூலம் மற்றும் மதுரை மாநகராட்சி உதவி ஆணையர்(பொ), உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர்(திட்டம்) ஆகியோரின் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின்(பொ) அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் மதுரை மாநகராட்சி வார்டு எண்.75, மண்டலம் –03, (மத்தியம) எண்.70, திருப்பரங்குன்றம் ரோடு(ரத்தினபுரம் AA ரேரடு) மதுரை 11, கதவு இலக்கம் கொண்ட இடம் பழைய பட்டா எண் 478 (பழைய சர்வே எண்.2001ன் கட்டுப்பட்ட புதிய T.S. எண்.2001/1, 2002/3, 2002/2005 மற்றும் இதர நகர புல எண்கள் மாடக்குளம் வருவாய் கிராமம் பழங்காநத்தம் எல்லைக்குட்பட்ட வெங்கடேஸ்வரா திருக்கோவிலுக்கு சொந்தமான நந்தவனம் இடத்தை மொத்த பரப்பளவு ஏக்கர் 1 ஏக்கர் 34,848 சதுர அடியை போலி ஆவணம் மூலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், அதனை அகற்றிடவும், தன்னுடைய மனுவின் மீது நடவடிக்கை எடுக்காத மதுரை மாநகராட்சி அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்கும்படி தன்னுடைய மனுவில் கோரியுள்ளார்.

இந்நேர்வில் மாடக்குளம் வருவாய் கிராமத்தில் உள்ள அருள்மிகு வெங்கடேஸ்வரா திருக்கோவிலுக்கு சொந்தமான 1.82 ஏக்கர் பரப்பளவு கொண்ட நந்தவனத்தை அங்குள்ள பஸ் கம்பெனி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு அறிய முடிகிறது. மேற்படி இடம் 1933 ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்த வருவாய் நகரளவை ஆவணங்களின்படி 1 ஏக்கர் 34848 சதுர அடி பட்டா எண் 478ன்படி வெங்கடேஸ்வரா திருக்கோவில் நந்தவனம் என தாக்கலாகியுள்ளது என மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி ஆணையர்(பொ) ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதும் தெரிய வருகிறது. மேலும் மதுரை வருவாய் கோட்டாட்சியரின் 1.10.1956 நாளிட்ட கொடை ஆணை எண்.25/36 மற்றும் TK 8A/74/66 நாள்.10.12.56ன்படியும் நகர புல எண் 2001/1, பரப்பு 4096 சதுர அடி மதுரை முனிசிபல் கவுன்சில் ரோடு எனவும், 2001/2 பரப்பு 1 ஏக்கர் 30752 சதுர அடி லங்கராம் என்பரின் பெயரிலும், உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது எனவும், தற்போதைய நகரளவை வருவாய் ஆவணங்களின்படி சர்வே வார்டு IV பிளாக் 37, பரப்பளவு 6850 சதுர மீட்டர் லங்கராம் மற்றும் 8 நபர்கள் பெயரில் தாக்கலாகியுள்ளது என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம்–3 (மத்தியம்) உதவி ஆணையரின் அறிக்கையின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மேற்குறிப்பிட்ட வெங்கடேஸ்வரா திருக்கோவிலுக்கு சொந்தமான 1.82 ஏக்கர் இடத்தை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக 2021ஆம் ஆண்டு முதல் பல நிலைகளில் புகார் மனு அளித்தும் மதுரை மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், இம்முறைமன்றம், இந்நேர்வு தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிட்ட பின்பும், மேற்குறிப்பிட்ட இடம் 1933 ஆண்டு நடைமுறையில் இருந்த வருவாய்

நகரளவை ஆவணங்களின்படி உரிய நடவடிக்கை எடுக்காமலும், அந்த குறிப்பிட்ட இடம் வெங்கடேஸ்வரா திருக்கோவிலுக்குச் சொந்தமான நந்தவனம் என்று ஆவணங்களில் உள்ளது என்று ஒரு அறிக்கை அளித்துள்ளது மிகவும் கண்டிக்கத்தக்கது. மனுதாரர் மனு அளித்தவுடன் மனுவை மாநகராட்சி அலுவலர்கள், இந்து அறநிலைத்துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலர்களுடன் இணைந்து பழைய ஆவணங்களின்படி மேற்குறிப்பிட்ட இடம் வெங்கடேஸ்வரா திருக்கோவிலுக்கு சொந்தமான நந்தவனமா என்று கள ஆய்வு செய்து உடனடி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் எவ்வித உரிய நடவடிக்கையும், முயற்சியும் எடுக்காதது மதுரை மாநகராட்சி மண்டலம்–03 (மத்தியம்) அலுவலர்களின் மெத்தனப்போக்கே காரணம் என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

இந்நிகழ்வு தொடர்பாக விரிவான விசாரணைக்குப் பின் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:

மனுதாரர் 2021 ஆம் ஆண்டே மேற்குறிப்பிட்ட இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தும், எவ்வித நடவடிக்கையும் எடுக்காத மதுரை மாநகராட்சி மண்டலம்–03(மத்தியம்) முன்னாள் மற்றும் தற்போது உள்ள அலுவலர்களை பொறுப்பாக்கி அவர்களின் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், 1933ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்த வருவாய் நகரளவை ஆவணங்களின்படி சர்வே வார்டு IV , 25, நகரப்புல எண்.2001ன் பரப்பளவு 1 ஏக்கர் 34848 சதுர அடி, பட்டா எண் 478ன்படி வெங்கடேஸ்வரா கோவில் நந்தவனம் என தாக்கலாகி, பின்பு எவ்வாறு தனியாருக்கு பட்டா வழங்கப்பட்டது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலர்களின் மீது நடவடிக்கை எடுக்குமாறு, மதுரை மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

மேலும், வெங்கடேஸ்வரா திருக்கோவில் நந்தவனம் என்று பழைய ஆவணங்களின்படி தாக்கலாகி பின்பு தனியார்வசம் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்பதை கண்டறிந்து அதனை மீட்க உரிய சட்டபூர்வமான தொடர் நடவடிக்கைகளை மதுரை மாவட்ட ஆட்சியருடன் இணைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்து அறநிலையத்துறைக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

இம்முறைமன்றம் ஆணையிட்டவாறு, இந்நிகழ்வு தொடர்பான அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

The Hindu Religious & Charitable Endowments Commissioner is appraised of this status for further verification of the real and legal ownership of the Nandavanam land in its original identity and unearth the background as to how private individuals have obtained title deeds of patta in their favour. Appropriate departmental action may be initiated in this regard to ensure the genuine legal right over the extent of the

" Nandavanam" land and proceed further to resume authority over the disputed Temple land as per the petitioner contention by reclamation.

2023–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு. இரா.மயில்சாமி,
த/பெ. இராமலிங்கம்,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை – 625 018.

2)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்ாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

3)ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

4)இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5)துணை ஆணையர்,
அறிஞர் அண்ணா மாளிகை,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை – 625 002.

6)உதவி ஆணையர்,
மண்டலம் – 02 (வடக்கு)
மதுரை மாநகராட்சி,
மதுரை.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

24/1/23

செயலாளருக்காக

23/1/23